


வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
# கல்முனை NET e paper
kalmunainet.com




தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
பிலவ வருடம் ஐப்பசி 06 (23.10.2021) இதழ் : 36

## பாராளுமன்ற ஆலோசனை குழு கூட்டத்தில் புலிக் கூச்சல்..

# சிறீதரன், சாணக்கியன் ஆவேசம்; வெளிநடப்பு



(நமது சபை நிருபர்கள்)

வன ஜீவராசிகள் அமைச்சின் ஆலோசனை கூட்டத்தில் வைத்து புலி முத்திரை குத்தப்பட்டதால் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் நேற்று வெளிநடப்பு செய்தனர்.

அமைச்சர் சி. பி இரத்நாயக்க தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பெயரில் நடத்தப்படுகின்ற காணி அபகரிப்புகள் சம்பந்தமாக இருவரும் விலாவாரியாக எடுத்து சொன்னார்கள்.

ஆனால், இவர்களின் உரையை செவிமடுக்காமல் ஆளும் 02



## பாஸ்போர்ட் எடுக்க செல்வோருக்கு ஓர் அவசர அறிவிப்பு

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் அலுவலகங்களுக்கு வர வேண்டிய தேவை உடையவர்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் முன்பதிவு மேற்கொண்டு அனுமதி பெறுதல் அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

திணைக்களத்தின்தலைமைஅலுவலகம் கொழும்பு பத்திரமுல்லையில் 02

## பாராளுமன்றத்தினுள் எதிர்க்கட்சி பதாகைகளுடன் ஆர்ப்பாட்டம்

(நமது சபை நிருபர்கள்)

சபாநாயகர் அனுமதி மறுத்த நிலையில் பாராளுமன்றத்தினுள் நேற்று வெள்ளிக்கிழமை காலை எதிர் கட்சிகள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகள் எதிர்நோக்கும் உர பிரச்சனைக்கு தீர்வு காணக்கோரி அரசாங்கத்துக்கு எதிரான பதாதைகளை தாங்கிய வாறும், எதிர்ப்பு கோசங்களை எழுப்பிய வாறும் பாராளுமன்றத்துக்கு உள்ளே போராட்டத்தில் ஈடுபட்டனர். 02



பாராளுமன்றத்தில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது

### அழுத்தம் வந்தாலும் மாற்றமில்லை:

## புதிய வியூகங்களுடன் ஆசிரியர் போராட்டம்

### யோசப் ஸ்டாலின் ஆவேசம்



அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பள முரண்பாட்டு பிரச்சினைக்கு உரிய தீர்வை அடைய பெறுகின்ற வரை போராட்டம் புதிய வியூகங்களுடன் உக்கிரமாக தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொது செயலாளர் யோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இவர் இது தொடர்பாக கல்முனை நெற்றுக்கு நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தவை வருமாறு

அழுத்தங்களுக்கு மேல் அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் எமது 02

## புளொட் மூத்த போராளி ஆனந்தி (சதானந்தன்) நேற்று காலமானார்



தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின்(புளொட்) அரசியற் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF) கட்சியின் செயலாளர் ஆனந்தி அண்ணர் என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் சதானந்தன் நேற்று 22 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை காலமானார்.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டி 02

### கிழக்கில் இன முரண்பாடுகளை தீர்க்கும் கலந்துரையாடல்

## ஆளுநர் தலைமையில் மட்டக்களப்பில் விசேட மாநாடு

கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற இனங்களுக்கிடையிலான சமூக பிரச்சனைகள் காணிப் பிரச்சினைகள் மற்றும் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கான விசேட கலந்துரையாடலொன்று நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மூன்று சமூகங்களுக்கு இடையிலும் அந்யோன்யமான சகவாழ்வை ஏற்படுத்துவதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் அவர்களினால் ஒரு குழு நியமிக்கப்பட்டு அக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளசிபாரிசுகள் தொடர்பாக பிரதேச செயலாளர்கள் இதன்போது அறிவூட்டப்பட்டதுடன், இவ்விடயங்கள் தொடர்பாக எதிர்கொண்ட 02

### காராமுனை குடியேற்றத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல்:

## தடுத்து நிறுத்த தொடர்ந்தும் போராட போவதாக கூட்டமைப்பு அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட காராமுனை பிரதேசத்தில் அரசாங்க ஆதரவுடன் திட்டமிடப்பட்ட அத்துமீறிய குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை ஆட்சேபித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு உச்ச நீதிமன்றத் தில் வழக்கு தாக்கல் செய்ய தீர்மானித்து உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நிலம் சார்ந்து நிலவுகின்ற பிரச்சினைகளுக்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன் நூற்று கணக்கான வழக்குகளை உயர் நீதிமன்றம், மேன்முறையிட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் கூட்டமைப்பு தாக்கல் செய்யும் என்று ஏற்கனவே தெரிவித்து உள்ளார்.

இந்நிலையில் காராமுனை பிரதேசத்தில் அத்துமீறிய குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என்று கூட்டமைப்பின் 02

### மாகாண பயண தடை

## 31 முதல் நீக்கம்

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடை எதிர்வரும் 31 ஆம் திகதி அதிகாலை 4.00 மணியுடன் நீக்கப்படுகின்றது என்று இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர டி சில்வா தெரிவித்தார்.

கொவிட் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியுடன் நேற்று வெள்ளிக் கிழமை நடத்திய கூட்டத்தில் இது உள்ளிட்ட முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்றார். 02

## முன்கள துறைகளில் உள்ளவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி!

முன்கள துறைகளில் பணியாற்றுவோருக்கு கொவிட்-19 தடுப்பூசியின் 3ஆம் டோஸ் (பூஸ்டர்) நவம்பர் 1ஆம் திகதிக்கு பின்னர் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானி இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அதற்கமைய சுகாதாரப் பிரிவினர், 02

## வன ஜீவராசிகள் அமைச்சின்...

கட்சி எம். பிகள் சிலர் புலி, பயங்கரவாதிகள், கொட்டி என்று சத்தம் போட்டு தொடர்ச்சியாக இடையூறு ஏற்படுத்தினார்கள்.

புலியை ஏன் இங்கு இழுக்கின்றீர்கள்? என்பதாக தமிழ் எம்.பிகள் வினவினர். ஆயினும், ஆளும் கட்சி எம். பிகள் செவிமடுப்பதற்கு தயாராக இருக்கவில்லை. ஆத்திரமடைந்த இருவரும் கடுமையான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்ட பின் ஆவேசத்தில் வெளியேறினர்.

இதனால், இருவரும் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்ய நேர்ந்தது. இந்நிலையில் கூட்டம் முடிந்த பிற்பாடு இவர்களை சந்தித்த அமைச்சர் ரத்நாயக்க, சிங்கள எம். பிகளின் நடத்தைக்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன், வடக்கு, கிழக்கில் வன ஜீவராசிகள் திணைக்களம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை தீர்த்து வைக்க உரிய நடவடிக்கைகளை எடுப்பார் என்று உறுதிமொழி வழங்கினார்.

இதே நேரம், சம்பவத்தை கண்டித்து பாராளுமன்ற அமர்வில் சுமந்திரன் எம். பி உரையாற்றினார். இது ஒரு மிகவும் துரதிஷ்டமான சம்பவம், இப்பாராளுமன்றத்தின் துயர நிலை என்று தெரிவித்தார்.

சந்திம வீரக்கொடி எம்.பி மாத்திரமே சக ஆளும் கட்சி எம்.பிகளின் நடத்தையை கண்டித்து எதிர்த்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புளொட் மூத்த போராளி...

ருந்த அவருக்கு இறக்கும்போது வயது 76.

1945ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, கொம்மாந்துரை கிராமத்தில் பிறந்த ஆனந்தி அண்ணர், 1970களின் ஆரம்பம் முதலே - காந்தீயம் அமைப்பில் இணைந்து பணியாற்றி வந்திருந்தார்.

காந்தீயம் அமைப்பின் பணிப்பாளர் மருத்துவர் ராஜசுந்தரம் அவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து,

அவரும் தேடப்பட்ட ஒரு சூழ்நிலையில், தலைமறைவு வாழ்வுக்குள் சென்றார்.

அதனை தொடர்ந்து - ஆனந்தி அண்ணர், உமாமகேஸ்வரன் தலைமையிலான புளொட் அமைப்பில் இணைந்து, தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் செயற்பட்டுவந்தார்.

1989ஆம் ஆண்டு, புளொட் அமைப்பு தனது அரசியற் பிரிவை, ஓர் அரசியற் கட்சியாக இலங்கையில் பதிவு செய்த போது

“ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி” என்றஅந்தஅரசியற்கட்சியின்செயலாளராக, உமாமகேஸ்வரன் அவர்களால், ஆனந்தி அண்ணர் நியமிக்கப்பட்டிருந்தார்.

அன்றிலிருந்து இன்று வரை - அவர் அந்த பொறுப்பில் இருந்து செயற்பட்டு வந்தார்.

ஆனந்தி அண்ணரின் இறுதி கிரியை நிகழ்வுகள் கருவேற்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில் என்ற முகவரியில் இருக்கும் அவரது வீட்டில் நேற்று பிற்பகல் 5:00 மணியளவில் இடம்பெற்றது.

## பாராளுமன்றத்தினுள் எதிர்க்...

பாராளுமன்றத்துக்கு நடுவிலும், ஆசனங்களுக்கு அருகிலும் எழுந்து நின்ற இவர்கள், விவசாயிகளுக்கு உரத்தை வழங்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சத்தம் போட்டார்கள்.

எதிர் கட்சி தலைவர் சஜித் பிறேமதாஸ தமிழ், சிங்கள மொழிகளில் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு சத்தமிட்டார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழர் முற்போக்கு கூட்டணி எம். பிகளும் இதில் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்று கொண்டிருந்த அதே நேரம், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும், கல்வி அமைச்சருமான தினேஸ் குணவர்த்தனவால் செயல் நுணுக்க அபிவிருத்தி, கருத்திட்ட சட்டமூலம் மீதான இரு கட்டளைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சபாநாயகரின் அனுமதியுடன் நிறைவேற்றப்பட்டன.

பாராளுமன்றம் நேற்றுக் காலை கூடிய பொழுது தினப் பணிகள் நிறைவடைந்ததும் எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியல்ல, விவசாயிகளின்பிரச்சினைதொடர்பாக ஒழுங்கு பிரச்சனைகள் எழுப்பினார். என்றாலும் சபாநாயகர் அனுமதி வழங்காத நிலையிலேயே எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்த ஆரம்பித்தனர்.

இங்கு தனது கவனயீர்ப்பு விடயத்தை முன்வைத்து பேசிய எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியல்ல,

இரசாயனஉரப்பாவனையிலிருந்துசேதனப் பசளை பயன்பாட்டுக்கு மாறுவதற்கு 10 ஆண்டு திட்டங்கள் வகுத்து இருப்பதாக தேர்தல் காலத்தில் நீங்கள் கூறிய போதும், ஒருவரிடத்தில் அதனை அமுல்படுத்துவதன் நோக்கம் என்ன என்று கேள்வி எழுப்பினார். என்றாலும் அரசாங்க தரப்பில் இதற்கு உரிய பதில்கள் வழங்கப்படவில்லை.

பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் ஆரம்பம் ஆன போது எதிர் கட்சியினர் அமைதியாகி ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

## அழுத்தம் வந்தாலும் மாற்ற...

போராட்டம் முழுவீச்சுடன் தொடரும். பின்வாங்குதல் என்கிற பேச்சுக்கே இடமில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அடங்கலாக நாடு பூராவும் உள்ள ஆசிரியர்கள் தொடர்ந்தும் பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வந்து உள்ளனர்.

நாடு பூராவும் உள்ள 200 பேர் ஆரம்ப பாடசாலைகளை திறந்து அரசாங்கம் நாடி பிடித்து பார்த்தது. 3000 பாடசாலைகள் இவ்விதம் திறக்கப்பட்டன. ஆனால் ஆசிரியர்கள் முழுமையாக பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு செல்வார்கள். கையொப்பம் இடுவார்கள். அதன் பின் போராட்டத்தை தொடர்வார்கள். எமது போராட்டம் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு கொண்டு செல்கின்றது.

இதை பொறுக்க முடியாத தரப்பினர் எமக்கு புலி முத்திரை குத்த பார்க்கின்றார்கள். இது இந்நாட்டின் வழமையான அரசியல் நிலையே ஆகும்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## மீனவர் பிரச்சினையில்...

மாபியா கும்பல் இருந்து செயல்படுகிற போல் தெரிகிறது. தமிழக ஆழ்கடல் மீன்பிடி படகுகளின் முதலாளிகளாக இருப்போரில் பலர், தமிழ்நாட்டு அரசியல்வாதிகள். இவர்களின் ஏவலாளர்களாகவே தமிழக மீனவர்கள் இங்கே மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்கள் எல்லாம் தினக் கூலிக்கு மாரடிக்கும் தொழிலாளர்கள் என்பது, பரிதாபகரமான உண்மை.

ஆகவே, இந்த மீனவர் பிரச்சினை என்பது இருதரப்பிலும் மனிதாபிமானத்தோடு பிணைந்தது.

இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி *Bottom drawling* முறையில் மீன் பிடிப்பதற்கு இந்தியாவும் தடை விதித்திருக்கிறது. இதற்கான சட்டம் இயற்றப்பட்டும் இருக்கிறது. இலங்கையிலும் தடை செய்வதற்கான சட்டம் இருக்கிறது. ஆனால், சட்டத்தை அமுல்படுத்த இலங்கை மீனவர்களின் கோரிக்கை நியாயமானதாகவே இருக்கிறது.

இந்த மீன்பிடியை இந்திய எல்லைக்குள் பயன்படுத்தாத தமிழக மீனவர்கள், எல்லை தாண்டி அத்துமீறி இலங்கைக்குள் பயன்படுத்துவதை எந்தவகையிலும் நியாயப்படுத்தவும் முடியாது; அனுமதிக்கவும் முடியாது.

ஆகவே, கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க கோரி வடக்கு, கிழக்கு மீனவர்கள் போராடுவது தமிழக மீனவர்களுக்கு எதிராகவோ அல்லது இந்தியாவுக்கு எதிராகவோ அல்ல என்ற உண்மையை சகல தரப்பும் புரிந்து கொண்டால் சரி.

காலங்காலமாக தொடரும் இந்த பிரச்சனை மூக்கின் சளியாக முக்கியமாக இருப்பதற்கு அனுமதிக்க முடியாது.

இரு நாடுகளும் இணைந்த பரஸ்பர தீர்வே இதற்கு சாத்தியமாகும்.

## குடிசையை இழந்த வயோதிப தம்பதிக்கு கனடா வாழ் ஐயப்ப பக்தர்களால் புதிய வீடு அன்பளிப்பு





கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற தீ விபத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்திவெளி பிரதேசத்தில் குடிசை, உடைமை ஆகியவற்றை இழந்த வயோதிப தம்பதிக்கு கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற ஐயப்ப சுவாமி பக்தர்களின் நிதி பங்களிப்பில் அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடு நிர்மாணித்து கொடுக்கப்பட்டது.

அகிம்சா சமூக நிறுவனத்தின் தலைவர் வி. விஜயராஜாவின் சிபாரிசில் ஐயப்பன் இல்ல ஸ்தாபகர் மோகனின் ஒருங்கிணைப்பில் அருணன், மிலன், சுகுமார், சுமித், ரமணன், உதயன், சூரி ஆகியோரின் பங்களிப்பில் இம்முதியவர்களுக்காக ‘சபரி வாசம்’ இல்லம் நிர்மாணிக்கப்பட்டது.

தமிழ் - இந்து பாரம்பரிய முறைப்படி நேற்று வெள்ளிக்கிழமை காலை ஒழுங்கு செய்யப்பட்ட வைபவத்தில் வைத்து பயனாளிகளுக்கு கிரான் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் சு. ராஜ்பாபு வீட்டை சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்.

ஐயப்பன் இல்லம் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் வறிய, வாழ்வாதாரம் இழந்த, வருமானம் குறைந்த 21 குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்பட்டு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## காராமுனை குடியேற்ற...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

நாம் இவரை நேற்று வெள்ளிக்கிழமை தொடர்பு கொண்டு கேட்டபோது இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

காராமுனை மண் தமிழர்களின் பாரம்பரிய பூமி ஆகும். இங்கு சில முஸ்லிம் குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் சிங்களவர்களுக்கும் இம்மண்ணுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

அரசாங்க அதிபர் கண்டும் காணாத மாதிரி இருக்கின்றார். காணி ஆணையாளர் ஒரு தலை பட்சமாக நடக்கின்றார். காவி உடை அணிந்தவர்கள் அத்துமீறலை ஊக்குவிக்கின்றார்கள்.

ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பு உயிரை கொடுத்தும் காராமுனை காப்பாற்ற தயாராகவே உள்ளது. இதில் விட்டு கொடுப்புக்கோ, சமரசத்துக்கோ இடம் கிடையாது.

ஆளுக்கு 06 ஏக்கர் காணி கேட்கின்றார்கள். வேற்று இடங்களை சேர்ந்த அவர்களுக்கு ஏற்கனவே மகாவலி திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட்டு உள்ளன. அவர்கள் வேறு திட்டத்துடன்தான் எமது மண்ணுக்கு இறக்குமதி செய்யப்பட்டு உள்ளார்கள். ஆனால் நாம் ஒரு அங்குலம் மண்ணைகூட விட்டு கொடுக்க மாட்டோம்.

## கிழக்கில் இன முரண்...

சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் அவர்களது தலைமையில் இடம்பெற்றிருந்தது குறித்த கலந்துரையாடலினை மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரன் ஏற்பாடு செய்திருந்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் உள்ளிட்ட குறித்த குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள உயரதிகாரிகளும், மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர்களும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

## மாகாண பயண...

இதே நேரம், மாகாண மட்ட ரயில் சேவைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பிக்கும் என்றும் இவர் தெரிவித்தார்.

இதே நேரம் எதிர்வரும் நவம்பர் 01 ஆம் திகதி முதல் மாகாணங்களுக்கு இடையிலான ரயில் போக்குவரத்து இடம்பெறும் என்று போக்குவரத்து அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்து உள்ளார்.

போக்குவரத்து தடை நீக்கப்படுகின்ற போதிலும் பொது சுகாதார நடைமுறைகள், கொரோனா தடுப்பு மற்றும் தவிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை இறுக்கமாக பின்பற்ற வேண்டும் என்று பொதுமக்கள் கோரப்பட்டு உள்ளனர்.

## பாஸ்போர்ட் எடுக்க...

உள்ளது. பிராந்திய அலுவலகங்கள் மாத்தறை, குருணாகல், கண்டி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருக்கின்றன.

இந்நிலையில் கடந்த வாரங்களில் திணைக்களத்தின் அலுவலங்களில் சேவைகளை பெற சென்றவர்களின் எண்ணிக்கை வகை, தொகை இன்றி காணப்பட்டது.

இந்நிலையில் இதற்கான மாற்று திட்டத்தை திணைக்களம் வகுத்து நடைமுறைப்படுத்த தொடங்கி உள்ளது.

திணைக்களத்தின் அலுவலகங்களுக்கு வர வேண்டிய தேவை உடையவர்கள் முன்கூட்டியே *www.immigration.gov.lk* இணைய தளத்தில் பதிவு மேற்கொண்டு அனுமதி பெற்று வர வேண்டும் என்று கோரப்பட்டு உள்ளார்கள்.

இவ்வாறு முன்கூட்டியே அனுமதி பெறாமல் வருபவர்கள் எவரும் அலுவலகங்களுக்குள் பிரவேசிக்க கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

## முன்கள துறைகளில் ...

முப்படை, பொலிஸார், சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் உள்ளிட்ட முன்கள ஊழியர்களுக்கு 3ஆவது டோஸாக *Pfizer* தடுப்பூசியை வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொவிட் தடுப்பூசியின் 3ஆவது டோஸாக *Pfizer* தடுப்பூசியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது

இதற்காக, அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் (SPC) 14.5 மில்லியன் *Pfizer* தடுப்பூசி டோஸ்களை கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் முன்கள பணியாளர்களைத் தொடர்ந்து, முன்னுரிமையின் அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், 30-60 வயதுக்குட்பட்ட புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுடன் கூடியவர்களுக்கும் இவ்வாறு 3ஆவது டோஸாக *Pfizer* தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை NET
kalmunainet.com
e paper
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com



பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

எந்தெந்த வழிகளில் ஆராய்ந்தாலும் வாழ்க்கையில் ஒழுக்கமே சிறந்த துணை என்பதால், எத்தகைய துன்பத்தை ஏற்றாவது அதைக் காக்க வேண்டும்.

# மீனவர் பிரச்சினையில் மனிதாபிமானம் வேண்டும்

வடக்கு, கிழக்கில் நடத்தப்பட்ட போராட்டங்கள் இரண்டும் இன்றைய அரசியல் நிலவரத்தை புடம் போட்டுக் காட்டியிருக்கிறது. கடந்த 17ஆம் திகதி மீனவர்கள் தங்களது பிரச்சினையை உணர்வு பூர்வமாக உலகுக்கு எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள்.

அதேபோல, அடுத்த நாள் வடக்கு, கிழக்கில் விவசாயிகள் தாங்கள் எதிர்கொள்ளும் அவலங்களை ஜனநாயக வழியில் வெளிப்படுத்தினார்கள்.

இந்தப் போராட்டங்களை ஏற்பாடு செய்த தமிழரசுக் கட்சி மீதோ அல்லது சுமந்திரன் மீதோ விமர்சனங்கள் இருக்கலாம்.

ஆனால், பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற நிலையில்தான் தமிழரசுக் கட்சி தலை கொடுத்திருக்கிறது.

உண்மையில், விவசாயிகள் எவரிடமும் இலவசம் கேட்கவுமில்லை; மானியம் கோரவுமில்லை. இரசாயன உரத்தை உரிய முறையில் வழங்குங்கள் என்பதுதான் அவர்களது கோரிக்கை.

முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை, மீனவர்கள் நடத்திய கடல் வழிப் போராட்டம் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தாலும், அவர்களது வாழ்வாதாரத்தோடும் கடல் வளத்தோடும் சம்பந்தப்பட்டதாகும்.

தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி செயல்பாடு, வடக்கு, கிழக்கில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இருதரப்பு மீனவர்களும் கடலில் மோதும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து இருக்கிறது.

கரையிலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஊடுருவி, மீன்களையும் கடல் வளத்தையும் அள்ளிச் செல்லும் தமிழக மீனவர்களின் கைங்கரியம் கட்டுக்கடங்காமல் தான் தொடர்கிறது.

*‘Bottom drawling’* என்று சொல்லப்படுகின்ற மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இவர்கள், இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி இலங்கையின் திருகோணமலை, மன்னார் கரையோரப் பிரதேசங்களில் ஊடுருவும் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித்துச் செல்கின்றனர். யாழ்ப்பாணத்தின் தீவு பிரதேசங்கள் உட்பட மன்னார் கரையோரப் பகுதிகளிலும் முல்லைத்தீவு திருகோணமலை பிரதேசங்களிலும் சுதந்திரமாக மீன் பிடிக்கும் நிலையில் தமிழக மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த, *Bottom drawling* (வொட்டம் ரோலிங் ) முறை என்பது, கடல் அடியில் வலைகளை போட்டு இழுவைப்படகு மூலம், வாரி வளித்து செல்வதாகும். அதாவது, சாதாரணமாக குளங்களில் ‘அத்தாங்கு’ பயன்படுத்தி மீன் பிடிக்கும் முறைக்கு ஒப்பானதாகும்.

இதனால், மீன் குஞ்சுகளும் கடல் தாவரங்களும் அளிக்கப்படுவதோடு பவளப் பாறைகளும் சேதம் ஆக்கப்படுகின்றன.

இந்த முறை மூலம் மீன் பிடித்து தமிழக கடற்பரப்பில் கடல்வளத்தை அழித்த தமிழ்நாடு மீனவர்கள், மீன் வளம் அருகிப் போன நிலையில்தான், இலங்கைக் கரையை நோக்கி படையெடுக்கிறார்கள். இதேநிலை, இலங்கை மீனவர்களுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது.

யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கு மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாது கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்தக் காலப் பகுதியில் இந்திய மீனவர்கள், இலங்கை எல்லைக்குள் அத்துமீறி சுதந்திரமாக மீன் பிடித்துச் சென்றனர். இதனை எவரும் கண்டு கொள்ளவே இல்லை. என்றாலும், நிலைமை வழமைக்கு திரும்பியதும், வடக்கு - கிழக்கு மீனவர்கள் தங்களது ஜீவனோபாய தொழிலை செய்ய முடியாத நிலைமை உருவாகி இருக்கிறது என்பதுதான் யதார்த்தமான உண்மை.

கடல் வளம் பாதிக்கப்பட்டால், தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கும் என்ற, இலங்கை மீனவர்களின் கோரிக்கையும் போராட்டமும் நியாயமானதும் யதார்த்தமானதுமாகும். எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களுக்கு பின்னால் ஒரு

மிகுதி 2ஆம் பக்கம்



# ஏட்டிக்கு போட்டியான அரசியல் போராட்டக்களம்



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 17, 18 ஆம்திகதிகளில்நடத்தப்பட்ட, மீனவர்கள், விவசாயிகளின் போராட்டங்கள், ஈபிடிபி மற்றும்தமிழ் அரசுக் கட்சிகளுக்கு இடையில் ஒரு ஏட்டிக்குப் போட்டியான நிலையை உருவாக்கியிருக்கிறது. முல்லைத் தீவிலிருந்து பருத்தித்துறை வரை மீனவர்களால் நடத்தப்பட்ட போராட்டம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் வாதப்பிரதிவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

உண்மையில், மீனவர் பிரச்சனை என்பது மிகவும் கவனமாக கையாள வேண்டிய இரு நாடுகளின் பிரச்சனை. உணர்ச்சிகளுக்குள் மீனவர்களை தள்ளி விட முடியாது. ஊடுருவும் இந்திய மீனவர்கள் எங்கள் நாட்டு கடல் வளங்களையும் மீன் வளங்களையும் அழிக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்காக இரு தரப்பு மீனவர்களையும் மோத மோத விட்டுவிட்டு புதினம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பிரச்சினையை தீர்ப்பதற்கான அணுகுமுறைகள் மிகவும் யதார்த்தமாக இருக்க வேண்டும்.

இந்த நிலையில், தமிழக மீனவர்களின் ஊடுருவலை தடுக்க, அரசு சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பது ஆர்ப்பாட்டம் நடத்திய மீனவர்களினதும் சுமந்திரன், சாணக்கியன், ஸ்ரீதரன் ஆகிய எம்பிக்களின் கோரிக்கையாகவும் வலியுறுத்தலாகவும் இருந்தது.

நல்லாட்சிக் காலத்தில் அரசோடு ஒட்டி உறவாடியவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்.

சுமந்திரன் எம்பி அப்போதும் எம்பியாக இருந்ததோடு, முக்கிய கதாநாயகனாகவும் அந்த அரசாங்கத்தில் திகழ்ந்தார்.

அப்படி இருந்தும் மீனவர் ஊடுருவலை தடுக்க அவர்கள் எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு, இப்போது இந்த அரசு மீது குற்றம் சாட்டுவதில் என்ன நியாயம் இருக்கிறது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்புகின்றார்.

2017, 2018 ஆம் ஆண்டுகளில், அதாவது, நல்லாட்சி காலத்தில் மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இரண்டு சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இதில் சுமந்திரனின் தனிநபர் பிரேரணையும் அடங்கும்.

இந்த நாட்களில் இந்த சட்டங்களை நாங்களும் ஆதரித்தோம். அப்போது மிகவும் பலமாக இருந்தவர்கள் ஏன் சட்டத்தை அமுல்படுத்தவில்லை. சட்டத்தை கொண்டு வந்துவிட்டு கிடப்பில் போட்டுவிட்டார்கள். இப்போது, தாங்கள் விட்ட தவறை மறைப்பதோடு இன்னொருவர் மீது பழியை போடுகின்றார்கள். மீன்பிடி அமைச்சராக இருக்கின்ற என் மீது திட்டமிட்டு பழியை போடுவதிலும் இந்த அரசாங்கத்தின் மீது பழியை போடுவதிலும் எவ்வித அர்த்தமும் இல்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டமாக கூறுகிறார்.

இழந்து போகும் செல்வாக்கை தக்க வைத்துக் கொள்வதற்காக, தமிழரசுக்கட்சி மீனவர் பிரச்சனையை கையில் எடுத்து அரசியலாக்கி வருகின்றது எனவும் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டுகிறார்.

மீனவர் போராட்டத்தில் நேரடியாக கலந்துகொண்டு அமைச்சர் மீது தனிப்பட்ட ரீதியில் குற்றம்சாட்டிய சாணக்கியன் எம்.பி தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ‘பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நம்பிக்கையில்லாத ஒருவர்’ என தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற எல்லை தாண்டிய அத்துமீறிய சட்ட விரோத தொழில் முறைக்கு எதிராக 2017 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இழுவை வலை தடைச் சட்டம் பயன்படுத்தப்படாமையாலேயே இந்தியக் கடற்றொழிலாளர் அதிகளவில் எல்லை தாண்டி வருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த கடற்றொழில் அமைச்சர், மேற்படி சட்டத்தை உருவாக்கிய போது, மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்வதற்காக ஈ.பி.டி.பி. கட்சியும் ஆதரவளித்திருந்தமையை சுட்டிக் காட்டினார்.

மேலும், தம்மால் உருவாக்கப்பட்ட ஆட்சிக்காலத்தில் இந்தச் சட்டம் இயற்றப்பட்டதாக தெரிவிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றவர்கள், தமது ஆட்சிக் காலத்தில் இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு எதிராக மேற்படி சட்டத்தைப் பிரயோகிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இழுவை வலைச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் சுமார் 100 இற்கு மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்ட போதிலும், அவைக்கு எதிராக இழுவை வலைச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டினார்.

அவர்களின் கடற்பயணம் தொடர்பாக அலட்டிக் கொள்ளவில்லை எனவும் அது தோல்வியில் முடிவடைந்திருப்பதாகவும் அத்தோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஒரு நம்பிக்கை அற்றவர் எனவும் அவர் கடந்த காலங்களில் எங்கு இருந்தார், நாளை எங்கு செல்வார் என்பது அனைவருக்குத் தெரியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# தமிழ்க் கைதிகளை அச்சுறுத்திய சம்பவம்: உடனடியாக விசாரிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு



அநுராதபுரம் சிறைச்சாலையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் 12ஆம் திகதி இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் சட்ட மாஅதிபரின் ஆலோசனையுடன் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மாஅதிபருக்கு உச்ச நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை (21) உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் 8 கைதிகளால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு, காமினி அமரசேகர, யசந்த கோதாகொட, ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் கடந்த வியாழனன்று (21) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வுத்தரவை வழங்கியிருந்தது.

குறித்த மனுவில் விடுக்கப்பட்ட கோரிக்கையை கருத்திலெடுத்த நீதிமன்றம், கைதிகளை அநுராதபுரம் சிறையில் இருந்து உடனடியாக வேறு பொருத்தமான சிறைக்கு மாற்றுமாறு, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கும் உத்தரவிட்டது.

குறித்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மனு, கடந்த ஒக்டோபர் 05ஆம் திகதி பரிசீலிக்கப்பட்ட போது, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ள எட்டு கைதிகளுக்கும் போதிய பாதுகாப்பை வழங்குவதற்கான ஆலோசனையை வழங்குமாறு சட்ட மாஅதிபருக்கு உச்ச நீதிமன்றம் ஆலோசனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இம்மனு மீதான விசாரணையை எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதி ஆரம்பிப்பதற்கான உத்தரவையும் நீதிபதிகள் குழாம் விடுத்தது.



# விவசாயிகள் அரசுக்கு கால அவகாசம் வழங்க வேண்டும்

## குறைந்தது ஒரு போகத்துக்காவது சேதனப் பசளையை பயன்படுத்திப் பார்க்கலாம்

**மூவின மக்களினதும் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய கூடிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும், குறிப்பாக சிறுபான்மை மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பது அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் செல்லையா இராசையா தெரிவித்தார்.**

**கல்முனைநெற் மின் இதழுக்கு செல்லையா இராசையா வழங்கிய சிறப்பு பேட்டி**

**கே மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?**

அரசியலில் எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். ஆனால், மாகாண சபை தேர்தலை அவசரமாக, அவசியமாக நடத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அதை விட எத்தனையோ முக்கியமான விடயங்கள் அரசாங்கத்துக்கு உள்ளன. ஆட்சி சிக்கல்களை வென்று முன்னோக்கி நடத்தி கொண்டு செல்வதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டி உள்ளது.

நாட்டையும், மக்களையும் பொருளாதார ரீதியாக மீட்க வேண்டி உள்ளது. மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் ஓங்கி குரல் கொடுக்கின்றன. இந்தியா பாரிய அழுத்தத்தை பிரயோகிக்கின்றது. ஆகவேதான் அரசாங்கமும் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று வார்த்தை அளவில் உச்சரிக்க நேர்ந்து உள்ளது.

பழைய முறையில்தான் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அதற்கு சட்ட ஏற்பாடுகளில் உரிய மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். இவற்றுக்கெல்லாம் கால அவகாசம் போதாது. மேலும், தற்போதைய சூழலில் எந்த தேர்தலை நடத்துவதும் அரசாங்கத்தின் வியூகமாக இருக்க முடியாது.

**கே கடந்த பொது தேர்தலில் நீங்கள் கருணா அம்மானை ஆதரித்து இருந்தீர்கள். தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டு விட்டதே?**

கருணா அம்மன் தோற்கவில்லை. தோற்கடிக்கப்பட்டார். அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் அவரை கைவிடவும் இல்லை, ஏமாற்றவும் இல்லை. 30000 வாக்குகளுக்கு மேல் வழங்கி உள்ளனர். கடந்த காலங்களில் அம்மானை காட்டிலும் குறைந்த வாக்குகளை பெற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்றனர்.

அதே நேரம், அவருக்கு வழங்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை வேறு, கணக்கு காட்டப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை வேறு என்பது எமது தெளிவான நிலைப்பாடு ஆகும். கணக்கு விட்டு விட்டார்கள் என்பது களத்தில் இருந்த எங்களுக்கு நிச்சயமாக தெரியும். அரசாங்கம் அவரை கை விட்டு ஏமாற்றி உள்ளது.

ஏனென்றால், இவ்வளவு வாக்குகளை பெற்ற அவரை தேசிய பட்டியல் எம். பியாகவோ, கிழக்கு மாகாண ஆளுனராகவோ அரசாங்கம் நியமித்து இருத்தல் வேண்டும். அவ்வாறான வாக்குறுதி தேர்தலுக்கு முன்னர் அவருக்கு வழங்கப்பட்டு இருந்தது என்பது அனைவருக்கும் தெரிந்த பரம இரகசியம்தான்.

ஆனால், அவர் தமிழ் மக்களின் வாக்குகளை சிதைப்பதற்காகவோ, தமிழர் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்காகவோ, மாற்று இனத்தவர்களுக்கு வெற்றியை தாரை வார்த்து கொடுப்பதற்காகவோ தேர்தலில் குதித்தவர் அல்லர்.

**கே கிழக்கு மாகாண ஆளுனராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்படுவதை நீங்கள் ஆட்சேபிக்கின்றீர்களா?**

மக்களுக்கு சேவை செய்ய கூடியவராக இருக்க வேண்டும். அவர் தமிழராக, சிங்களவராக, முஸ்லிமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் அவசியம் கிடையாது. சிறுபான்மை மக்களை அரவணைத்து செல்ல கூடிய பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த ஒருவர் ஆளுனராக நியமிக்கப்படுவதில் எந்தவொரு தவறும் கிடையாது.

பெரும்பான்மை சமூகத்தில் அவ்வாறானவர்கள் இருக்கவும் செய்கின்றனர்தான். அவ்வாறான ஒருவரின் பெயர் கிழக்கு மாகாண ஆளுனர் பதவிக்கு அடிபடவும் செய்கின்றது. நான் கேணல் ரட்ணபிரியவை சொல்கின்றேன். அவர் வடக்கில் இராணுவத்தில் கடமையாற்றியபோது தமிழ் மக்களின் பேரபிமானத்தை பெற்றவர்.

புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் சமூகத்தில் இரண்டற கலந்து வாழ்வதற்கு புதிய வழிகளையும், வாழ்வாதாரங்களையும் ஏற்படுத்தி கொடுத்தவர். இவரை தெற்குக்கு இட மாற்றம் செய்தபோது, தமிழ் இளையோர்கள் அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த வரலாறு இருக்கின்றது.

அவர் கடந்த பொது தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் வன்னியில் போட்டியிட்டு மிக சொற்ப வாக்குகளில் தவறி போனார். இவருக்கு தேசிய பட்டியல் எம். பி நியமனத்தை அரசாங்கம் வழங்குவதன் மூலம் இவரின் பாரபட்சம் அற்ற சேவை தமிழ் மக்களுக்கும் காத்திரமான வகையில் கிடைக்க மகத்தான வாய்ப்பு உள்ளது.

## கருணா அம்மான் தோற்கவில்லை; தோற்கடிக்கப்பட்டார்

அதே போல, கிழக்கு மாகாண ஆளுனராக இவர் நியமனம் செய்யப்பட்டால் நிச்சயம் சிறுபான்மை இன மக்களின் மனங்களை அரசாங்கம் பெரிய அளவில் வெற்றி கொள்ள கூடியதாக இருக்கும். இவருக்கான ஆதரவு கிழக்கிலும் நிறைந்து காணப்படுகின்றது. இவரை போன்ற ஒருவரையே எமது மக்கள் மிக நீண்ட காலமாக எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

**கே தற்போதைய தொழிற்சங்க போராட்டங்கள் குறித்து என்ன சொல்கின்றீர்கள்?**

நானும் ஒரு தொழிற்சங்க போராளிதான். பல தொழிற்சங்கங்களிலும், தொழிற்சங்கங்களின் சமாசங்களிலும் உயர் நிலை பதவிகளை வகித்திருக்கின்றேன். ஆனால், தற்போதைய தொழிற்சங்க போராட்டங்கள் தொழிலாளர் நலன் சார்ந்தவையாக இல்லை. உதாரணமாக ஆசிரியர் தொழிற்சங்கங்களின் போராட்டங்களை சொல்ல முடியும்.

ஏனென்றால், அவர்களின் பிரச்சினை என்பது கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக இருந்து வருகின்றது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலும் இருந்தது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இவர்கள் பேச்சு வார்த்தை நடத்தவும் இல்லை, போர் கொடி தூக்கவும் இல்லை. இப்போது அரசாங்கத்துக்கு எதிராக முறுக்கி விடப்பட்டு உள்ளார்கள் என்று சொல்வதே சால பொருத்தம் ஆனது.

இது பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல இருக்கின்றது. மொட்டு அரசாங்கம் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில்தான் நாட்டை பொறுப்பேற்றது. கொரோனா உச்சம் தொட்டு காணப்பட்டது. இன்னமும் கொரோனாவில் இருந்து நாடும், மக்களும் முழுமையாக மீளவே இல்லை.

அதே போல, உலகளாவிய ரீதியில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது. அது இலங்கையிலும் பாரிய நெருக்கடிகளை உருவாக்கி உள்ளது. ரொக்கெற் வேகத்தில் விலைவாசிகள் அதிகரித்து உள்ளன. ஆனால் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை என்கிற நிலை சற்று ஆறுதலை மக்களுக்கு தரவே செய்கின்றது. விரைவில் புதிய வரவு – செலவு திட்டம் வருகின்றது.

அதில் புதிய தீர்வுகளும், நிவாரணங்களும் கிடைக்கும் என்கிற நம்பிக்கை வீண் போகாது. உலகிலேயே முதல் தர பிரஜையாக மதிக்கப்பட வேண்டியவன் விவசாயி. ஏனென்றால் உணவை உற்பத்தி செய்து தருகின்ற தொழிலை செய்பவன். ஆனால் யதார்த்தத்தில் அவ்வாறான நிலைமை கிடையாது. அநேகமான நாடுகளில் விவசாயிகளுக்கு நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன.

இந்தியாவில் விவசாயிகள் அடிக்கடி தற்கொலை செய்கின்ற அளவுக்கு நிலைமை மிக மோசமாக உள்ளது. அவ்வாறான நிலைமை, இலங்கையில் கிடையாது என்பதே உண்மையான நிலை ஆகும். இரசாயன பசளைகள் மீது அரசாங்கம் தடை கொண்டு வந்திருக்கின்றது. சேதன பசளையை பயன்படுத்துமாறு அறிவுறுத்தி உள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து தரவும் நடவடிக்கை எடுத்து உள்ளது. அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். விவசாயிகள் குறைந்தது ஒரு போகத்துக்காவது சேதன பசளையை பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபட வேண்டும். அதை விடுத்து அவசர அவசரமாக போராட்டம் நடத்துவது என்பது அவசியமும், அர்த்தமும் அற்றதாகும்.

மீனவர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால், உரிய முறையில் அணுகி தீர்வுகளை அடைதல் வேண்டும். அரசாங்கத்தை மாற்றுவதற்கு அல்லது அசைப்பதற்கு திட்டமிடப்பட்ட வகைகளில் இவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர் என்பதே எமது அனுமானம் ஆகும்.

**கே தமிழ் தேசிய கூட்டமைப்பின் போக்கு குறித்து என்ன சொல்கின்றீர்கள்?**

கடந்த 70 வருடங்களாக தமிழ் மக்களுக்கு போக்கு காட்டி கொண்டு இருக்கின்றனர். எதிர்க்கட்சி அரசியலால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மைகளும் இது வரை பெற்று தரப்பட்டதாக இல்லை. இடையில் நல்லாட்சி அரசாங்கத்தோடு நகமும் சதையும் போல ஒட்டி உறவாடினார்கள். அப்போதும் அவர்கள் எமது மக்களின் பிரச்சினைகளை தீர்த்து தர முயற்சிக்கவே இல்லை.

உதாரணமாக அவர்கள் நினைத்து இருந்தால் நிச்சயமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நிச்சயம் தரம் உயர்த்தி தந்திருக்க முடியும். அதே போல மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் காணி மற்றும் மேய்ச்சல் தரை பிரச்சினைகள் உள்ளன. காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை பிச்சைக்காரனின் புண்ணை போல நீடிக்கப்பட்டு கொண்டே செல்கின்றது.

தமிழர் பிரதேசங்களை அபிவிருத்தி செய்து தர வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உள்ளது. அதை தமிழ் தேசிய கூட்டமைப்புதான் செய்து தர வேண்டும் என்று கிடையாது. ஆனால் அதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தடையாக இருக்கவே கூடாது. யாப்பு திருத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட வேண்டும்.

மூவின மக்களினதும் அபிலாஷைகளை நிறைவேற்றி தர கூடிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும். சிறுபான்மை மக்களை பாதிப்பதாக அது இருக்க கூடாது. ஒரே நாடு, ஒரே சட்டம் என்கிற கோட்பாடுகூட முறையாக அமுல்படுத்தப்படுகின்றபோது, சிறுபான்மை மக்களுக்கு எந்த தீங்கும் வந்து விட மாட்டாது. ஆனால், அதில் அரசாங்கம் உரிய அக்கறையை காட்டவில்லை.

நான் இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் சொல்ல வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் பதவியில் எம். ஏ. சுமந்திரன் ஒற்றை கண் வைத்து காத்து கிடக்கின்றார். அவரின் பேராசையை போல ஒரு நகைச்சுவை இருக்க முடியாது. புல் தரையில் விதைப்பது தான் அவரது வித்தை.




நேர்காணல்: தர்மேந்திரா



# பேரம்பேசும் அரசியலால் முஸ்லிம்களுக்கு பாதிப்பு

**அரசியல்வாதி என்பதிலும் பார்க்க தன்னை யதார்த்தவாதி என்று அழைப்பதையே, தான் விரும்புவதாகவும் முஸ்லிம் தலைமைகள் என்று சொல்லுமளவுக்கு எந்த முஸ்லிம் கட்சிகளும் கிடையாதென்றும் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் நௌஷாட் தெரிவித்தார்.**

**கல்முனை நெற் பத்திரிகைக்கு அவர் வழங்கிய நேர்காணலில் நௌஷாத் தெரிவித்ததாவது.**

**கே கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக அம்பாரை மாவட்டத்தில் பெயர் சொல்லுமளவுக்கு பிரபல்யமான அரசியல்வாதி நீங்கள், சமகால அரசியல் பற்றிய உங்கள் பார்வை என்ன?**

அரசியல்வாதி என்பதை விடவும் ஒரு யதார்த்தவாதியாக இருக்கவே நான் விரும்புகிறேன். இதனால், சாத்தியப் படும் அரசியல், சமூகத்துக்கு சாதகமான அரசியல் என்பவைகள் பற்றித்தான் நான், சிந்திப்பதுண்டு. அந்த வகையில், இன்றுள்ள எந்தத் தலைமைகளும் யதார்த் தம் பற்றிச் சிந்திப்பதாக நான் நினைக்க வில்லை. இதனால்தான் இத்தனை நெருக் கடிகளையும் முஸ்லிம்கள் எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறது.

**கே அவ்வாறானால், முஸ்லிம் தலை மைகளால் ஏற்பட்ட விளைவு களாக இந்த நெருக்கடிகளைக் கருதலாமா?**

முதலாவதாக, நமது நாட்டில் முஸ்லிம் தலைமைகள் என்று, ஒன்றுமில்லையே... சில கட்சிகளுக்கு முஸ்லிம்கள் தலைவர் களாக இருக்கின்றனர். அவ்வளவுதான். இவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பேரம்பேசும் அரசியல்தான், முஸ்லிம் சமூகத்தை இந்தளவுக்கு அந்நிய சமூகங்களிடமிருந்து தூரப்படவும், பிறர் சந்தேகப்படவும் வைத்திருக்கிறது. இதற்கு முன்னர், முஸ்லிம்கள் கௌரவமாகவும், நம்பிக்கையுடையோர் என்ற நன்மதிப் புடனும் வாழ்ந்திருக்கின்றனர்.

**கே முஸ்லிம்கள் மீது ஏனையோர் வைத்திருந்த நம்பிக்கை, நன்ம திப்புக்களை மீளக் கட்டியெழுப்ப என்ன செய்யலாம் என நினைக் கிறீர்?**

முதலில், இந்தப் பேரம்பேசும் அரசிய லைக் கைவிட வேண்டும். இரண்டாவ தாக நாட்டின் நிலைமைகள் தொடர்பி லான யதார்த்தங்களைச் சிந்திப்பது அவ சியம். மூன்றாவதாக மதகுருமார் (மௌல விமார்) அரசியலில் கலப்பதை, அல்லது அரசியல்வாதிகள் மௌலவிமார்களை அரசியலுக்குள் அழைப்பதை நிறுத்த வேண்டும். இந்த மூன்றும் நடந்தால், தேசிய கட்சிகளின் சாயலில் அரசியல் செய்யும் நிலைமைகள் உருவாகும். இது, நாட்டுக்கான பொதுவான அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கலாம். ஒரு நாட்டில், எல்லோருக்கும் பொதுவான அரசியல் கலாசாரம் எப்போது தோன்றுகி றதோ! அன்றிருந்தே, தனித்துவ அரசியல் மற்றும் சமூக அடையாள அரசியல் தோல்வியுறத் தொடங்கும்.

**பேரம்பேசும் அரசியலும் அடையாள அரசியலுமே அழிவுக்கான அடித்தளம்**

**கே மத குருமார் அரசியலில் பங்கேற் பதால், அப்படியென்ன பாதகங் கள் ஏற்படுகின்றன?**

எங்கேயாவது ஏற்படுகின்ற முறுகல் களை அல்லது சமூக மோதல்களைத் தீர்த்து வைக்க மத்தியஸ்தர்கள் இல்லாது போகின்றதே! மட்டுமல்ல, மதத்தின் பேரால் உசுப்பேற்றப்படும் அரசியலால், யதார்த்தங்களையும் மறந்து மக்கள் உணர்ச்சிகளுக்கு அடிபணிய நேரிடுகின் றதே!

**கே தேசிய கட்சிகளின் சாயலில் என் பது, தேசிய கட்சிகளில் போட் டியிடுவதையா குறிக்கிறது,?**

அவ்வாறு, தேசிய கட்சிகளில் அங்கம் வகித்த முஸ்லிம் தலைவர்களால்தானே! முஸ்லிம்களின் கௌரவம், மதிப்பு, மரி யாதைகள் உயர்ந்திருந்தன. சேர் ராஸிக் பரீத், டொக்டர் பதியுதின் மஹ்மூத் உள்ளிட்ட தலைவர்களின் காலத்தை எண்ணிப் பாருங்களேன்.

**கே மாகாண சபைத் தேர்தல் நடந் தால் போட்டியிடுவீர்களா? எந்தக் கட்சியில்போட்டியிடும்எண்ணம் உள்ளது? முதலமைச்சர் பதவியும் தயாராக இருப்பதாகத் தகவல் கசிந்திருக்கிறதே?**

*(சிரிக்கிறார்...)* ஏற்கனவே சொன்ன தைப் போன்று நான், யதார்த்தவாதி. ஊகங்களுக்குப் பதிலளிக்கும் எந்தத் தேவையும் எனக்கில்லை, நேரம் வந்தால் மட்டுமல்ல காலம் கைகூடினால், அது பற்றிச் சிந்திக்கலாம்.

**எந்தத் தலைவர்களும் யதார்த்தம் பற்றி சிந்திப்பதாக இல்லை**

**கே கரங்காய் வட்டை விவசாய நிலங்கள், வேறு இனத்துச் சகோ தரர்களால் ஆக்கிரமிக்கப்படுவ தாகச் சொல்லப்படும் செய்தி களின் உண்மை நிலவரத்தை, தெளிவாக விபரிக்கலாமா?**

அந்த விவசாய நிலங்கள் சம்மாந்து றை மக்களின் பூர்வீகக் காணிகள். காலா காலந் தொட்டு இப்பிரதேச மக்களால் விவசாயம் செய்யும் நிலமும் கரங்காய் வட்டைதான். இன்று, தென்பகுதியிலி ருந்து அழைத்து வரப்பட்டு அம்பாரை யில் குடியமர்த்தப்பட்ட சகோதரர்கள் சிலர், இக்காணிகளில் விவசாயம் செய்ய விளைகின்றனர். இதற்குச் சில அரசியல் வாதிகள் துணையாகச் செயற்படுகின் றனர் அவ்வளவுதான்.

நேர்காணல்: நிப்ராஸ்



# நெருப்புத் தணலுடன் நூலில் நடக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

*இலட்சிய அரசியல் எதிர்நோக்கிய இன்னல்களுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நல்லதொரு உதாரணம். துரதிஷ்டமாக, இக்கட்சித் தலைமை சிறைவாசம் சென்றி ருந்த இந்த ஆறு மாதங்களுக்குள்ளும், அறம் அழிந்துபோன நிலைக்கு கட்சி தள்ளப்பட்டிருக்கிறது.*

*உட்பூசல்களும், உடன்படாத போக்குகளும், அதிகாரங்க ளில் குளிர்காயும் அற்பத்தனங்களும்தான், இந்தக் கட்சியை இப்படிச் சீரழித்துள்ளது. இந்தச் சீரழிவுகள் ஒன்றை மட்டும் உணர்த்தும் சாட்சியாக நிற்பதுதான், கட்சியின் தலைமைக்கு கிடைத்துள்ள ஆறுதல்.*

*இயங்க இயலாத சூழலில்தானே இத்தனையும் நடந்தி ருக்கிறது, சிறைசெல்லாது தலைமை, களம் நின்றிருந் தால், இத்தனையும் நடந்திருக்காது என்கின்றனர் பலர்.*

*அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்துக்கு ஆதர வளித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்பிக்கள் எதை எதிர்பார்த்தனர். தலைவரின் விடுதலையையா? அல்லது அமைச்சுப் பதவிகளையா? என்ற குழப்பத்தில் ஆரம்பிக்கத் தொடங்கிய இந்த உட்பூசலை, சிறை மீண்டு வந்திருக்கின்ற தலைமை எப்படிக் கையாளப்போகிறதோ? தெரியாது. இந்தக் கையாள்கைகள் வெற்றியளித்தால், தலைமையின் ஆளுமை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்படும்.*

*எதிர்வருபவை, தேர்தல் காலங்கள் என்பதால், நிச்சயமாக இவ்விடயத்தை வெல்வதற்கே தலைமை திட்டமிடும். முத லாவதாக, இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்த எம்பிக் களுக்கு எதிரான நடவடிக்கை. இந்த நடவடிக் கைக்காக நியமிக்கப்பட்ட குழு செயற்பட்டதா? அவ்வாறு செயற்பட்டி ருப்பின் ஏன்? எம்பிக்கள் அனைவரும் இவ்வாறு விசார ணைக்கு அழைக்கப்படவில்லை. மட்டுமல்ல, இவ்வாறு விசாரணைக்கு வருமாறு எந்தக் கடிதங்களும் தமக்கு வர வில்லையே என, எம்பிக்கள் ஏன் சொல்கின்றனர். ஒழுக் காற்று குழு இயங்கவில்லை என்பதற்கு இதைவிட எதை சாட்சியாக வைக்க வேண்டும் என்கின்றனர் ஒரு சிலர்.*

*கொரோனாச் சூழல் காரணமாகச் செயற்பட முடியாமல் போனதாகக் கூறும் தரப்பினர், தலைமையின் நடவடிக்கை கள் தங்களைப் பாதிக்க கூடாதென்பதில் தெளிவுடன் உள்ளதாகவே தெரிகிறது. இன்னும், இருபதாவது திருத் தத்தை எதிர்த்து, இரட்டைப் பிரஜாவுரிமைக்கு வாக்களித்த இக்கட்சி, ஒருவரின் நிலைப்பாடு வித்தியாசமாக உள்ளதாகவே உணர முடிகிறது.*

*அரசுடன் இணைவதும் இல்லை, எதிர்க் கட்சியில் இருப் பதும் இல்லை, ஏதாவதொரு சந்தர்ப்பம் பேரம்பேசலுக்கு வாய்ப்பளித்தால், வாக்குப் பலத்தை பாவிக்க வேண்டியது தான் என்கிறார் இந்த எம்பி. பொத்துவில் முஹுதுமலை, சம்மாந்துறை கரங்கா வட்டைப் பிரச்சினைகளை, இந்தச் சந்தர்ப்பங்களே தீர்த்தது என்பதும் இவரது நியாயங்களில் சில. வட்டமடு பிரச்சினையும் விரைவில் தீருமென்கிறார் இந்த எம்பி.*

**உடன்படாத போக்குகளும் அற்பத்தனங்களும் கட்சியை சீரழிக்கின்றன**

*இந்த நியாயங்கள் கட்சியின் தலைமையைப் பொறுத்த வரை, சுயநலங்களை நியாயப்படுத்துவதற்கான நொண்டிச் சாட்டுக்களாகத்தான் நோக்கப்படுகின்றன. பாராளுமன்ற இருக்கையில், கட்சித் தலைவருக்கு அருகிலிருக்கும் இவரால், தலைவரின் விடுதலைக்காகப் பேச முடியாமல் போனதை விடவும், எந்த சுயநலத்தை எடுத்துச்சொல்ல என்கின்றனர் தலைமையின் விசுவாசிகள்.*

*எதிரணியில்தான் இருப்பது, இந்த அரசைத்தான் எதிர்ப் பது என்ற போக்கிலுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைமைக்கு, இந்த அரசின் ஆயுளில் நம்பிக்கை இல்லை. இத்தனை, வலிகளுக்குப் பிறகும் தைரியம் இழக்கவில்லை, தடம் புரளவில்லை என்றால், ஏதாவது இல்லாமலா? இருக்கும். இதைத்தான் தேர்தலிலாவது மக்கள் எதிர்பார்க் கி ன்றனர்.*

*வடக்கில் காலூன்றி, கிழக்கில் தலை நிமிரும் தறுவாயி லுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தென்னிலங்கை யிலும் ஓரளவு தெம்புடன்தானுள்ளது. ஆனாலும், இந்தத் தெம்பு தனிநபரிலா? அல்லது கட்சித் தலைமையின் ஆளுமையிலா? என்பது, எடுக்கப்படவுள்ள நடவடிக்கை களுக்குப் பின்னர் நடைபெறவுள்ள தேர்தலிலேதான் தெரியப்போகிறது.*

*புத்தளம், குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த இந்தக் கட்சி எம்பிக்களின் செயற்பாடுகள் அத்தனையும், தனிநபர் செல்வாக்கில் நம்பிக்கை உள்ளோராகவே தென்படுகிறது. எனினும், கட்சியில்தான் இருக்கிறோமென, அடிக்கடி இவர்கள் அறிக்கை விடுவதைப் பார்க்கின்றபோது அச்சமுள்ளதாகவும் ஊகிக்க முடிகிறது.*

# அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU): சர்வதேச மாநாட்டில் ரிஷார்ட் பதியுதீன் கைது விவகாரம்

"பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையளிக் கப்பட்ட இலங்கை பாராளுமன்ற உறுப் பினர் ரிஷாட் பதியுதீனின் விடுதலை குறித்து அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU) மகிழ்ச்சியடைகிறது.

இது தொடர்பான நீதிமன்ற வழக்கு அமர் வுகளைஎதிர்காலத்திலும்அனைத்துபாராளு மன்ற ஒன்றியம் (IPU) மிக நெருக்கமாக கண்காணிக்கும்" இவ்வாறு, கடந்த 18 ஆம் திகதிய அனைத்து பாராளுமன்ற ஒன்றியத் தின் (IPU) உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத் தில் பதிவிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம், 24 ஆம் திகதி பயங்கரவாத தடைச்சட்டம் (தற்காலிகப் பிரிவு) 1979 இன் 48 ஆவது சட்டப்பிரிவின் கீழ், சி.ஐ.டி யினரால் கைது செய்யப்பட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், 177 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டு பின்னர், இம்மாதம் 14 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினரான ரிஷாட் பதியுதீனின் வழக்கு தொடர்பில் அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU) தனது முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்தது.

உலகளாவிய ரீதியில் 13 பிராந்திய பாராளு மன்றங்களையும், 179 நாடுகளிலுள்ள பாரா ளுமன்றங்களில் அங்கத்துவத்தினை கொண் டதுமான அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU), ஒரு சர்வதேச அமைப்பாகும்.

1889 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஒன்றியம், ஜனநாயக ஆட்சியையும், அதன் பொறுப்புக் கூறலையும் ஊக்குவித்து, உத்வேகமளிக்கும் ஆரம்ப இலக்கை கொண்டதாகும்.

அத்துடன், இந்த ஒன்றியம் ஐ.நா பொதுச் சபையில் நிரந்தரமான அவதானிப்பாளர் தகைமையையும் பெற்றுள்ளது. ஐ.நா சபை விவகாரங்களில் குறிப்பிடத்தக்களவு தமது செல்வாக்கினை செலுத்தி வரும் அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU), ஐ.நா அமர்வுகளில் எண்ணற்ற பிரேரணை நிறைவேற்றலிலும் தனது பங்களிப்பினை நல்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அனைத்து பாராளுமன்ற ஒன்றி யத்தின் (IPU) புலன்விசாரணைகள் ஒரு போதும் பகிரங்கப்படுத்தப்படுவதுமில்லை.

இந்த வருடம் நவம்பர் மாதம் ஸ்பெயின், மட்ரிட் நகரில் இடம்பெறவிருக்கும் அமர் வின் போதும், ரிஷாட் பதியுதீனின் கைது தொடர்பிலும், அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU) தனது கவனத்தை செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தென்னிந்திய கலைஞர்களுடன் முதன்முறையாக கைகோர்க்கும் கிஷா பிலிம் மேக்கர்ஸ்

கல்முனையில் இருந்து பல இளம் படைப்பாளிகளை உள்வாங்கி இது வரையில் 14 படைப்புகளை வெளியிட்டு வெற்றி கண்டுள்ள கிஷா பிலிம் மேக்கர்ஸ் தனது அடுத்த கட்ட நகர்வாக தென்னிந்திய தமிழ் சினிமாவில் பல பாடல்களை பாடியுள்ள பின்னணி பாடகர் வேல்முருகன் அவர்களுடன் இணைந்து ஒரு காணொளி பாடலை உருவாக்கும் முயற்சியில் இறங்கினர்.

இந்த படைப்பில் இயக்குனராக கிஷா பிலிம் மேக்கர்ஸின் ஸ்தாபகர் வி.டிலோஜன் பாடல் வரிகள் மற்றும் இசை சஜய். ஏ. ஆர். அஸ் அவர்களும் பணியாற்றுவதாக இதுவரையில் தகவல் வெளியாகியுள்ளது. இன்னும் பல பிரபல கலைஞர்கள் இப்படைப்பில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அறியக் கிடைக்கிறது. பாடல் பதிவு மற்றும் படப்பிடிப்புக்கள் தற்போது நிறைவடைந்துள்ளது. மேலும் இது தொடர்பான உத்தியோகபூர்வ தக வல்கள் கிடைத்ததும் அவற்றையும் அறியத்தருகின்றோம்.

# உலக தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் வழங்கி வைப்பு!





உலக தினத்தை முன்னிட்டு 'மண்ணிற் கும் மக்களுக்கும்' என்ற தொனிப் பொரு ளில் கடந்த வாரம் பூம்புகார் கிழக்கு மக்க ளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

அவுஸ்ரேலியாவில் வசிக்கும் நாகன் சிவராஜ் இதற்கான நிதிப்பங்களிப்பை செய்திருந்தார். திருகோணமலை பசுமை அமைப்பின் உறுப்பினர்களும், பூம்புகார் கிழக்கு கிஃகு தலைவர் மற்றும் செயலாளர், சனசமூக நிலைய தலைவர் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

# இரசாயன உரப்பசளைத்தடைக்கு நிந்தவூர் விவசாயிகள் கண்டனம்






(ஏ.எல்.எம்.சலீம்)

விவசாயச் செய்கைக்கு தேவையான இர சாயன உரப்பசளை இறக்குமதியை அரசாங் கம் தடை செய்துள்ளமையைக் கண்டித்தும், பெரும்போக நெற்செய்கைக்கு இரசாயன உரப்பசளையான யூரியாவையே வழங்கு மாறு கோரியும் நிந்தவூர்ப் பிரதேச விவசா யிகள் நேற்று (வெள்ளி) பாரிய ஆர்ப் பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இலங்கையின் நெல் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் அம்பாறை மாவட்டத்தின் பிரதான விவசாயப் பிரிவான நிந்தவூர் கம நல சேவைகள் மத்திய நிலைய பிரிவு விவ சாயிகளே இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் விவசாய அமைப்புகளின் ஒன்றி யத்தினால், நிந்தவூர் செட்டியா வட்டை விவசாயப்பகுதியில்கண்டனஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன்,

அங்கிருந்து நிந்தவூர் கமநல சேவைகள் மத்திய நிலையம் வரை விவசாயிகள் ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்றதுடன், மத்திய நிலையம் முன்பாகவும் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

'அரசின் இயலாமையை விவசாயிகள் மீது திணிக்காதே', 'விவசாயிகளுக்குத் தேவயான யூரியா உரத்தை வழங்கு', 'அரசே, நெல் உற்பத்தியைப் புறக்கணித்து நாட்டில் பஞ்சத்தை உருவாக்காதே', 'இறக்குமதி செய்யும் அரிசியில் நஞ்சு இல்லையா', 'உரம் இன்றி உழவு இல்லை', 'சோளம், கரும்பு செய்கைக்கு யூரியா வழங்கும் அரசு நெற் செய்கைக்கு வழங்க மறுப்பது ஏன்?' என்பன போன்ற வாசகங் களைக் கொண்ட சுலோக அட்டைகளை விவசாயிகள் ஏந்தியிருந்தனர்.

அத்துடன் பல்வேறு கண்டன கோஷங் களையும் எழுப்பிய விவசாயிகள், தமக்கு பெரும்போக நெற்செய்கைக்கு யூரியா உரத்தையே வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

பெரும் போக நெல்விதைப்புக்கான காலம் நீடித்துச் செல்வதால் யூரியா பசளை வழங்கும் முடிவை அரசு அவசரமாக எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

இந்த பாரிய ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தமக்கு வழக்கம் போல் யூரியா இரசாயன உரப் பசளையை வழங்குமாறு ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர் ஆகியோரைக் கோரும் மகஜர் ஒன்றை, நிந்தவூர் கமநல சேவைகள் மத்திய நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் ஐ.எல்.எம்.ஹார்லிக்கிடம் விவசாயப் பிரதி நிதிகள் கையளித்தனர்.

பெருந்தொகையான விவசாயிகள் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திலும் பேரணியிலும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கரும்பு பூஞ்சை நோயினால் முதலாவது உயிரிழப்பு

கொரோனா தொற்றின் பின்னர் ஏற்பட்ட கரும் பூஞ்சை நோயினால் ஏற்பட்ட முதலாவது மரணம் நாட்டில் பதிவாகியுள்ளது.

குறித்த நபர் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர் சுமார் ஒரு வாரத்துக்கு முன்னர் உயிரிழந்துள்ளதாகவும், அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிரேதப் பரிசோதனைகளில் அவர் கரும் பூஞ்சை நோயினால் பீடிக்கப் பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.





# “உரம் இன்றி உழவு இல்லை”



(வ.சக்திவேல்)

ஆண்டாண்டு காலமாக செயற்கை உரங்களைப் பயன்படுத்தி வந்த விவசாயிகள் மத்தியில் இவ் வருடத்திலிருந்து அரசாங்கம் இயற்கை உரங்களைப் பயன்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் செயற்கை உர வகைகளையும் முற்றாகத் தடை செய்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த கோரிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதிலுமுள்ள விவசாயிகள் கொதித்தெழுந்து வீதிக்கிறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயத்திற்கு உரத்தை வழங்கக் கோரி மட்டக்களப்பிலும் திங்கட்கிழமை (18.10.2021) ஆரம்பாட்டங்கள் இடம் பெற்றன. விவசாயிகளின் ஒத்துழைப்புடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்த ஆர்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

மாவட்டத்திலுள்ள வெல்லாவெளி, கொக்கட்டிச்சேலை, ஆயித்தியமலை, வந்தாறுமூலை, கிரான் ஆகிய இடங்களிலும் அமைந்துள்ள கமநல கேந்திர நிலையங்களிற்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.



இதன்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான மா. நடராசா, இரா. துரைரெத்தினம், முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி. துரைராசசிங்கம் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், விவசாயிகள், பொதுமக்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அரசே உடன் உரம் வழங்க வேண்டும், விவசாயிகளுக்கு ஒளி வேண்டும், மண்வளத்தை மாற்றானுக்கு விற்பனை செய்வதை நிறுத்து, உரம் இன்றி உழவு இல்லை, உள்ளிட்ட வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## திட்டமிடல் இல்லாத அரசாங்கத்தின் செயல்பாட்டால் விவசாயிகள் திண்டாட்டம்

சேதனப் பசளை என்ற மாயை தற்போதைய அரசாங்கத்தினால் புகுத்தப்பட்டுள்ளது. அப்படியாயின், களை கொல்லிக்கு எந்த நீரை பாவிப்பது?

சேதனப் பசளை மூலம் விவசாயிகளுக்கு ஏற்படப் போகும் நஷ்டத்திற்கு நஷ்டஈடு வழங்கும் முன்மொழிவையும் எதிர்வரும் வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் இணைத்துக் கொள்ளுங்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

பசளை என்ற மாயை தற்போதைய அரசாங்கத்தினால் புகுத்தப்பட்டுள்ளது. உலகத்திலே எந்த நாட்டிலும் சேதனப் பசளையை முழுமையாகப் பாவித்துப் பயன் பெற்ற நாடு என்று எதுவும் இல்லை.

சவால் விடுகின்றேன், எந்த நாட்டில் சேதனப் பசளை முழுமையாகப் பாவித்துவிளைச்சலை அதிகரித்திருக்கின்றார்கள் என்று முடியுமானால் கூறட்டும்.

## விவசாயிகள் எழுச்சி போராட்டம்

கடந்த வருடம் நேபாளத்தில் முழுமையாகச் சேதனப் பசளை பாவிக்க வேண்டும் என்று கூறப்பட்டாலும் கூட மக்களின் எழுச்சி காரணமாகவும், ஆய்வுகளின் காரணமாகவும் 2035ஆம் ஆண்டு வரை அதனைப் பிற்போட்டிருக்கின்றார்கள்.

ஆனால், நம் நாட்டில் சேதனப் பசளை மாயையைக் கூறிக்கொண்டு எங்கள் விவசாயிகளை நஷ்டத்திற்குள் தள்ளும் செயற்பாடாகவே நாங்கள் இதனைப் பார்க்கின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்திலே தற்போது பெரும்போகச் செய்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

அதன் விளைச்சல் குறையுமாக இருந்தால் விவசாய அமைச்சரும், அரசாங்கமும் பதில் கூற வேண்டும். இதற்கான நஷ்டஈடுகளை தற்போதே நீங்கள் தயாராக வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், சேதனப் பசளை பாவித்து ஒரு ஏக்கருக்கு நாலில் ஒரு பங்கு விளைச்சலையே பெற முடியும்.

சேதனப் பசளை விடயத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், ஒரு திட்டமிடல் இல்லாமல் திடீரென செய்யச் சொன்னால், விவசாயிகள் என்ன செய்ய முடியும்.

எனவே, படிப்படியாக இதனை மாற்ற வேண்டுமே தவிர திடீரென இராணுவ நடவடிக்கை மூலம் செயற்படுத்துங்கள் என்று சொல்வதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

விவசாயிகளுக்கான தகுந்த தீர்வு தேவை. எனவே, எதிர்வரும் நவம்பர் மாதம் வெளியிடப்படவுள்ள நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்டத்தில் சேதனப் பசளை மூலம் விவசாயிகளுக்கு ஏற்படப் போகும் நஷ்டத்திற்கு நஷ்டஈடு வழங்கும் முன்மொழிவையும் இணைத்துக் கொள்ளுங்கள் என முன்னாள் எம்பி அரியநேந்திரன் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் 9 இலட்சம் நனோ நைட்ரஜன் திரவ பசளையை இறக்குமதி செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனை விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். இது விவசாயிகளின் பிரச்சினை மாத்திரமல்ல, சோறு சாப்பிடும் அனைவரினதும் பிரச்சினை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார். ‘இனத்தின் விடுதலைக்காகப் போராடிய இனம் இன்று, வாழ்வாதாரத்திற்காகப் போராடும் நிலைமைக்கு இந்த அரசு தள்ளியிருக்கின்றது.

போராட்டம் என்பது அறிந்து வருவது. அதற்கு எவரையும் அழைக்க வேண்டிய அவசியமில்லை. இது மக்களுக்காக, விவசாயிகளுக்காகச் செய்யும் போராட்டம். ஆனாலும். நாங்கள் மண்வெட்டியை வைத்திருப்பது தான் விமர்சனப் பொருளாக இருக்கும். எம்மை விமர்சிப்பது பரவாயில்லை. இவ்வாறாகவாவது எமது போராட்டம் இந்த அரசுக்குப் போய்ச் சேரவேண்டும். எங்களுடைய வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் மீன்பிடியையும், விவசாயத்தையும் நம்பி வாழும் மக்களே அதிகம்.




விவசாயிகளுக்கு இன்று உரம் இல்லாத நிலையில் இந்த மாவட்டங்களில் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு வாக்களித்த மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறாமல், தங்களது வியாபார நலன்களை மாத்திரம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இது மிகவும் கவலையானதொரு விடயம். இயற்கைப் பசளையின் மூலம் விவசாயம் செய்து எமது விளைச்சல்களை அதிகரிக்கலாம் என்று குழந்தைப் பிள்ளைத்தனமாக கருத்துக்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்’ என்றார் சாணக்கியன் எம்பி.

## வாரம் ஒரு படைப்பாளி

# நல்லரெட்ணசிங்கன் பாலேஸ்வரி



இலங்கையின் பெண் எழுத்தாளர்கள் மத்தியில் ஒரு நிலையான இடத்தை பிடிதிருந்தவர். இவர் திருகோணமலை மனையாவழி கிராமத்தில் 07.12. 1929 ஆண்டு பிறந்தார். 27. 02. 2014 ம் ஆண்டு மறைந்தார்

அதிக நாவல்களை எழுதிய பெண் எழுத்தாளர். ‘பாப்பா’, ‘ராஜி’ ஆகிய புனைப்பெயர்களிலும் எழுதி வந்தவர்.

இவர் ‘பெண்மையின் தனித்துவத்தன்மை பிரதிபலிக்கும் ஆக்கங்களை எழுதிய’ ஈழத்தின் முதலாவது பெண் நாவலாசிரியையாவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் பெற்றார். பின்பு சுன்னாகம் ஸ்ரீஸ்கந்தவரோதயாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, திருக்கோணமலை புனித மரியாள் கல்லூரி ஆகியவற்றில் பயின்றார்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியையான இவர் பெருந்தெரு விக்னேசுவரா மகா வித்தியாலயத்தின் முந்நாள் ஆசிரியரும் பிரதி அதிபருமாவார். ஆசிரிய சேவையில் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வுபெற்றார்.

திருகோணமலை மாவட்ட பெண்கள் நலன் புரிச்சங்கத்தின் முக்கிய செயற்பாட்டாளராகவும் பணியாற்றினார். தான் கற்கும் காலத்திலிருந்து வாசிப்புத்துறையில் ஈடுபாடு மிக்கவராக இருந்த இவரின் கன்னிக்கதை ‘வாழ்வளித்த தெய்வம்’ எனும் தலைப்பில் தினகரன் பத்திரிகையில் 1957ஆம் ஆண்டு பிரசுரமானது. அன்றிலிருந்து இருநூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், முப்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இத்தகைய ஆக்கங்கள் இலங்கையிலுள்ள தேசியப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ள அதே நேரத்தில் கல்கி, குங்குமம், உமா, தமிழ்ப்பாவை, கவிதை உறவு போன்ற இந்திய சஞ்சிகைகளிலும் ‘உலகம்’ (இத்தாலி), ‘ஈழநாடு’ (பாரிஸ்), ‘தமிழ்மலர்’ (மலேசியா) ஆகிய அனைத்துலக சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. பாலேஸ்வரி பன்னிரண்டு நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

* ‘சுடர்விளக்கு’ - 1966 (திருகோணமலை தமிழ் எழுத்தாளர் சங்க வெளியீடு)
* ‘பூஜைக்கு வந்த மலர்’ - 1971 (வீரகேசரி வெளியீடு)
* ‘உறவுக்கப்பால்’ 1975 (வீரகேசரி வெளியீடு)
* ‘கோவும் கோயிலும்’ - 1990 ஜனவரி (நரசி வெளியீடு)
* ‘உள்ளக்கோயில்’ - 1983 நவம்பர் (வீரகேசரி வெளியீடு) -
* ‘உள்ளத்தினுள்ளே’-1 990 ஏப்ரல் (மட்டக்களப்பு செபஸ்டியர் அச்சகம் வெளியீடு)
* ‘பிராயச்சித்தம்’ - 1984 ஜுலை (ரஜனி பப்ளிகேஸன்)
* ‘மாது என்னை மன்னித்துவிடு’ - 1993 ஜனவரி (ஸ்ரீ பத்திரகாலி அம்மன் தேவஸ்தால வெளியீடு)
* ‘எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு’ 1993 ஆகஸ்ட் (காந்தளகம் வெளியீடு, இந்தியா)
* ‘அகிலா உனக்காக’ - 1993 (மகாராஜ் அச்சகம், இந்தியா)
* ‘தத்தைவிடு தூது’ 1992 ஜுலை (மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகம்)
* ‘நினைவு நீங்காதது’ - 2003 (மணிமேகலைப் பிரசுரம், இந்தியா) ஆகிய நாவல்களை எழுதியுள்ளார்

இலங்கையில் அதிக நாவல்களை எழுதிய பெண் எழுத்தாளர் ந. பாலேஸ்வரி அவர்களே. இவர் இரண்டு சிறுகதை தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

* சுமைதாங்கி 1973 (நரசு வெளியீடு)
* தெய்வம் பேசுவதில்லை 2000 (காந்தளகம் வெளியீடு இந்தியா)

இவர் இன்று எம்மிடையே இல்லையென்றாலும் இவரது படைப்புகள் என்றும் இவரை நினைவு படுத்திக்கொண்டே இருக்கும் வாழ்க அவரின் புகழ் நாமம்

**கோவிலூர் செல்வராஜன்**

## பரிதவித்தே வாழ்கின்றோம்..!

மரபுகள் சிலவேளை
மண்ணுக்குள் புதைகிறது....
மனங்களும் சிலவேளை
மரணித்து உயிர்க்கின்றது!

புதையுண்ட பொக்கிஷங்கள்
புலப்பட்ட போதும்,
கைகளுக்கு எட்டாது
கானலாகி மறைகின்றது....

கண்ணீர் திவலைகள் கண்டபின்னும்,
கைகள் மரத்துக் கிடக்கின்றது...
கட்டுண்ட கோட்பாடுகளுக்குள்
கோமாளி முகமேற்று நடிக்கின்றோம்..

பருவங்கள் மறைந்த போதும்
பண்பு என்றும் மாறவில்லை,
பாவம் கொண்ட நெஞ்சமாக
பரிதவித்தே வாழ்கின்றோம்..!

**தீபகாந்தன்**

## இயற்கை...!!!

தினமும் எழும் சூரியனே...!
உன்னை யார் எழுப்புகிறார்?
துணையே இல்லாத நிலவே...!
யாருக்காக தினமும்
காத்திருக்கிறாய்?
உனக்கு என்ன அவ்வளவு சோகம்
மழையாய்ப் பொழிகிறாய்...!!
வானவில்லே ஏழு வண்ணத்தில்
யாருக்கு பாதை
அமைக்கிறாய்...!
எல்லாம் மனிதனுக்கு இல்லை
ஆனால் நாம் எல்லாத்தையும்
எடுத்துக் கொண்டோம் ...!
இயற்கையே....!!!

**சி. தாரணி.**
**திருகோணமலை**




# உலகின் தலைசிறந்த தத்துவஞானி சாக்ரடீஸ்



மனித வாழ்க்கையை செம்மைப்படுத்துவதிலும், மனித நாகரிகத்தை வழிமொழிவதிலும் தத்துவஞானிகளின் பங்கு அளப்பறியது.

வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் பல தத்துவஞானிகள் உதித்திருக்கின்றனர். உலகின் சிந்தனையை பல்வேறு வழிகளில் செம்மைப்படுத்தியிருக்கின்றனர். அவர்களுள் தலையாயவர் தத்துவஞானிகளின் தந்தை என்று போற்றப்படுபவரும், கிரேக்கத்தின் புகழை உலகெல்லாம் பரவச் செய்தவருமான ‘சாக்ரடீஸ்’ அவர்கள்.

இவருடைய வரலாற்றை சற்று நோக்குவோமானால்,

ஒரு சாதாரண குடும்பத்தில் கி. மு. 469 ஆம் ஆண்டு பிறந்தார் சாக்ரடீஸ். ஏழ்மையில்தான் பிறந்தார் வறுமையில்தான் வாழ்ந்தார். இளவயதில் ராணுவ வீரராக இருந்து ஏதென்ஸுக்காக பல போர்களில் பங்கெடுத்தார். சாக்ரடீஸ் வாழ்க்கையைப் பற்றி அதிகமாக சிந்தித்தார். எதையுமே வித்தியாசமாகவும் சிந்தித்தார்.

அவரது சிந்தனைகள் அந்த காலகட்டத்தில் உண்மை என நம்பப்பட்டவைகளின் அஸ்திவாரங்களையே ஆட்டம் காணச் செய்தன.

வாழ்வின் உண்மைகளை கண்டறிய வேண்டும் என்ற அதீத தாகம் சாக்ரடீஸுக்கு இருந்தது. தான் அறிந்த உண்மைகளை மக்களுக்கு சொல்ல அவர் கையாண்ட உத்தியே அலாதியானது அற்புதமானது.

அவர் கிரேக்கத்தின் பகல்பொழுதில் கையில் விளக்கேத்திக் கொண்டு கூட்டமுள்ள இடத்தில் எதையோ குனிந்து தேடுவதுபோல் நடிப்பார். வேடிக்கை பார்க்க அங்கு கூட்டம் கூடும். ‘என்ன தேடுகிறீர்கள்?’ என்று எவராவது கேட்கும்போது, ‘மனிதர்களைத் தேடுகிறேன்’ என்று பதில் கூறுவார். மக்கள் புரியாது விழிக்கும்போது அவர்களிடம் விளக்கிப்பேசி தன் கருத்துக்களை அவர்களது மனங்களில் விதைப்பார்.

சாக்ரடீஸ் வாழ்ந்த காலகட்டம் கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம், சமணம், சீக்கியம் போன்ற மதங்கள் தோன்றாத காலம். அப்போது ஏதென்ஸ் மக்கள் நிலவையும், சூரியனையும், இதிகாச நாயகர்களையும் கடவுளாக வழிபட்டு வந்தனர். அதனை எதிர்த்து துணிந்து கேள்வி கேட்டார் சாக்ரடீஸ்.

துணிந்து கேள்வி கேட்டவர்களை எள்ளி நகையாடுவதும், அவர்கள் பணிந்து போக வேண்டும் என்று துன்புறுத்தி வற்புறுத்துவதும் தான் வரலாறு முழுவதும் காணப்படும் உண்மை. கேள்வி கேட்க கேட்க சாக்ரடீஸின் எதிரிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போனது. சாக்ரடீஸின் அறிவுப்பூர்வ பேச்சால் புரட்சி வெடிக்கலாம் என ஆட்சியாளர்கள் அஞ்சி சமுதாயத்தை சீர்திருத்த நினைத்தவர் மீது கிரேக்க இளையர்களிடம் தவறான கருத்துக்களை பரப்புகிறார் என்று குற்றச்சாட்டுகளை ஆணித்தரமாகவும் அறிவுப்பூர்வமாகவும் மறுத்தாலும் தனது 70 ஆவது வயதில் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டார் சாக்ரடீஸ்.

சாக்ரடீஸ்க்கு நீதி மன்றத்தில் தீர்ப்பாக மரண தண்டணை உறுதியானது. அப்போது கூட கலங்கவில்லை சாக்ரடீஸ் ஏனெனில் மரணத்தைப்பற்றி அவரே ஒருமுறை இவ்வாறு கூறியிருந்தார்.

‘மரணத்தைப் பற்றி கவலைப்படாதே. நீ இருக்கும்வரை மரணம் வரப்போவதில்லை. அது என்னவென்று உனக்கு தெரியாது அது வந்தபோது நீயே இருக்கப் போவதில்லை பிறகு ஏன் கவலை?’

சாக்ரடீஸுக்குவிஷம்கொடுத்துக்கொல்ல முடிவு செய்யப்பட்டது. அப்போது ஏதென்ஸில் விழாக் காலமாக இருந்ததால் அவரது மரணம் மூன்று வாரங்களுக்கு தள்ளிப் போடப்பட்டது.சாக்ரடீஸ்சிறையில்அடைக்கப்பட்டார்.

சாக்ரடீஸை எப்படியாவது விடுவித்து விட வேண்டுமென்று துணிந்த சாக்ரடீஸ் நண்பரும்,மாணவருமானகிரீட்டோசிறைக்குள் புகுந்து, ‘தப்பி ஓடிவிடலாம்’ என சாக்ரடீஸை கெஞ்சினார்.

அதற்குசாக்ரடீஸ், ‘என்னருமைகிரீட்டோ நான்நீதியைநேசித்தவன்நேர்மையானவன் என்ற நற்பெயரோடு இறந்துவிடுகிறேன். எவரும் கவலைப்பட வேண்டாம். என் உடலை எரிப்பதா, புதைப்பதா என்ற குழப்பமும் வேண்டாம். இறந்தபிறகு உடலில் நான் ஏது? அது வெறும் உணர்வற்ற சடலம் தான் அதை எப்படி செய்தால் என்ன?’

கி.மு. 399 ஆம் ஆண்டு சாக்ரடீஸின் மரணம்குறிக்கப்பட்டநாள்வந்தபோது,ஒரு விஷக்கோப்பையை சாக்ரடீஸுக்கு சிறை அதிகாரி கொடுத்தார். விஷக்கோப்பையை அவர் புன்னகையுடன் பெற்று மறுமொழி சொல்லாமல் விஷத்தை அருந்தி உயிர் துறந்தார் சாக்ரடீஸ்.

வாழ்நாள் முழுவதும் கேள்வி கேட்ட சாக்ரடீஸ் தனது மரணத்தைப் பற்றி ஒரு கேள்விகூட கேட்கவில்லை. சாக்ரடீஸின் இறுதி ஊர்வலத்தில் பேசிய அவரது மாணவரும் கிரேக்கம் தந்த இன்னொரு தத்துவ மேதையுமான பிளேட்டோ இவ்வாறு கூறினார்.

‘ஏதென்ஸ் நகர நண்பர்களே! ஒரு நல்லவரை மாபெரும் அறிஞரை வீண்பழி சுமத்தி கொன்றுவிட்ட, குறை மதிப்படைந்த நாடு என்ற தீராத பழிச்சொல்லை ஏதென்ஸ் சுமக்கப் போகிறது’

சாக்ரடீஸின் உயிர் பிரிந்த சில நாட்களிலேயே தமது தவறை உணர்ந்தது ஏதென்ஸ். சாக்ரடீஸின்மீது பழி சுமத்தியவர்களில் சிலர் பிறகு குற்ற உணர்வால் தூக்கிலிட்டு கொன்றதாக வரலாறு கூறுகிறது.

‘உன்னையே நீ அறிவாய்’ என்பது சாக்ரடீஸின் புகழ்பெற்ற வாசகம்.

‘எதையும் அப்படியே நம்பிவிடாதே. ஏன்? எதற்கு? என்று கேள்வி கேள்’ என்ற சிந்தனைதான் சாக்ரடீஸ் இந்த உலகிற்கு விட்டுச்சென்ற மாபெரும் சொத்து.

‘ஏன் என்ற கேள்வி இங்கு கேட்காமல் வாழ்க்கை இல்லை’ கவிஞர் வாலியின் இந்த பாடல் வரிகளை 2500 ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்து காட்டியவர் சாக்ரடீஸ்.

ஆயிரத்தில் ஒருவன் என்ற படத்தில் அந்த பாடல்வரி இடம்பெற்றிருந்தது. சளைக்காமல் ஏன்? எதற்கு? என்ற கேள்வி கேட்டதால் சாக்ரடீஸை ஆயிரத்தில் அல்ல ஆயிரம் கோடியில் ஒருவராக இன்று மதிக்கிறது உலகம்.

நம் முன்னோர்கள் பின்பற்றினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக நாமும் எல்லாவற்றையும் அப்படியே பின்பற்ற வேண்டுமா? என்ற கேள்வியை நாம் கேட்டுக்கொள்ளலாம். நமது வாழ்க்கையை முடக்கும் சில மூட நம்பிக்கையை களையெடுக்கலாம். ஏன்? எதற்கு? என்ற கேள்வி கேட்டால் சாக்ரடீஸைப் போல நமக்கும் தெளிவு பிறக்கும். தெளிவு பிறந்துவிட்டால் அந்த வானம் என்ன உலகமே உன் வசப்படும்.

**சிவனேஸ்வரன் தாரணி**
**திருகோணமலை**




ஆசிய நிலையத்தின் அனுசரனையுடன் **GAFSO** நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் பெண்களுக்கு எதிரான வன்முறையை இல்லாதொழிக்கும் வேலைத்திட்டத்தை கீழ் மக்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக **GAFSO** வினால் காரைதீவு பிரதேச செயலகத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவு உடன் இணைந்து காரைதீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மகளிர் சங்க உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்றை நடத்தியிருந்தது .இதில் சிறப்பு வளவாளர்களாக காரைதீவு பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெனிதா மோகன் மற்றும்.**Deen Mohamed Aafdeen GAFSO** நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் **A.J Kamil** imdad ,மற்றும் கள உத்தியோகத்தரான சி.தனுசாந் ஆகியேர்ரம் கலந்து சிறப்பித்தனர்.



**MFCD** நிறுவனத்தினால் பெண் தலைமைத்துவ குடும்ப பெண்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு 2021. 10.17 ஆம் திகதி சாய்ந்தமருது **MFCD** அலுவலகத்தில் வலுவூட்டல் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்வினை நடத்தினர். இந்நிகழ்வு தலைமை அலுவலக உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வளவாளராக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிதா மோகன் மற்றும் உளவள உத்தியோகத்தர் ஜனாப் மனுஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். அரசசார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட ஒருங்கிணைப்பாளரான ஜனாப் இர்பான் உத்தியோக பூர்வமாக இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

# அமரர் பத்மநாதன் டிரேன்



மண்ணில் 1990 07 24

விண்ணில் 2017 10 25

இயற்கையில் மரணம் என்பது விதி-உனது
இளமையில் மரணம் எமக்கு சதி மகனே!
கடைக்குட்டி யார் வந்து பிறந்தாய்- எம்முடன்
கடைசிவரை வாழாமல் போனாய் மகனே!
நீ இருக்கும் தருணத்தில் -உன் நினைவு-
கள் எனக்கிருந்த தில்லை நீ இல்லா
உலகில் - உம் நினைவுகளை மறக்க
முடியவில்லை மறைந்த செய்தி கேட்டு
ஆண்டுகள் நான்கு மறையவில்லை உம்
முகம் எம்மை விட்டு. வாழவேண்டிய
வயதில் வாடிய மலராகி உதிர்ந்து போன
உன்னை எப்படி மறப்போம் மகனே!
இமை மூடும் நேரத்தில் எங்களை விட்டு
பிரிந்தாய்- நாம் இறக்கும் வரை உன்
நினைவுகளை சுமந்திருப்போம்..
உன் ஆத்மா சாந்தியடையட்டும்...

தகவல்-
குடும்பத்தினர்.
தொடர்பு- ப.ஜினித்ரா 152,லெனின் வீதி,
காரைதீவு-01.

# சூடானில் தொடர் போராட்டம்!

## இராணுவத்திடம் ஒப்படைக்குமாறு ஒரு குழுவும் தேர்தல் நடாத்துமாறு மற்றுமொரு குழுவும் ஏட்டிக்கு போட்டி



சூடான் தலைநகர் கார்டுமில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் பாரியளவில் ஆரம்பமாகியிருக்கிறது. பிரதமர் தலைமையிலான அமைச்சரவையை கலைத்து தேர்தல் நடத்துமாறும், இடைக்கால அரசாங்கத்தை இராணுவத்திடம் ஒப்படைக்குமாறும் இரு வேறு ஆர்ப்பாட்டங்கள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பாகின.

இரு தரத்தாரும் தலைநகரிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதால், வன்முறைகள் இடம்பெறாதவாறு படையினர் பாதுகாப்பு நடவடிக்கையி ல் ஈடுபட்டுள்ளனர்.

சூடானில் மிக நீண்ட காலம் பதவியி லிருந்த ஜனாதிபதி ஒமர்அல்பஷீர் 2019 இல் பதவிநீக்கப்பட்டபிறகு, பிரதமர்அப்துல்லா ஹம்டான் தலைமையில் இடைக்கால அரசாங்கம் நியமிக்கப்பட்டது.

இராணுவமும் சுதந்திரத்துக்கான மாற்றம் என்ற சிவில் சமூகத்தினரும் இணைந்து உருவாக்கிய இந்த அரசாங்கம் 2023 இல், தேர்தல் நடத்தப்படும் வரை ஆட்சியில் இருப்பதென்ற நிபந்தனையுடன் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த அரசாங்கம் உருவாக்கப்பட்ட இரண்டு வருடங்களி ல் நாட்டின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் என்பன சீரழிந்துள்ளதாக உணர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்து உள்ளனர்.

சுதந்திரத்துக்கான மாற்றம் என்ற சிவில் சமூக அமைப்பு பிரதமர் அப்துல்லா ஹம்டானுக்கு ஆதரவாகச் செயற்படுவதால், இராணுவத்தினரின் பிடியில் ஆட்சி செல்லக் கூடாதென விரும்புகின்றனர். இதனாலே, அமைச்சரவையைக் கலைத்து தேர்தல் நடத்துமாறு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஆனால், இராணுவத்துக்கு ஆதரவானோர், ஆட்சியை 2023 வரை நேரடியாக இராணுவம் பொறுப் பேற்க வேண்டுமென ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சூடானின், ஒருபகுதியை பிரித்து தருமாறு, போராடியவர்களுக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி ஒமர்அல்பஷீர் எடுத்திருந்த இராணுவ நடவடிக்கை, சர்வதேசளவில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனால் இவர்மீது போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்டு 2019 இல் பதவி விலக்கப்பட்டிருந்தார். இதன் பின்னரே சூடானில் இராணுவம், சுதந்திரத்துக் கான மாற்றம் என்ற சிவில் சமூகத்தினரின் இணக்கப்பாட்டில் இடைக்கால அரசாங்கம் நியமிக்கப்பட்டது.

# பிரான்சில் தாக்குதல்!

## தாக்குதல்தாரியை சுட்டுக் கொன்ற பொலிசார்




பிரான்ஸ் - *Colombes (Hauts - de - Seine)* நகரில் நேற்று மாலை (உள்ளூர் நேரம்) பொலிஸார் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தாக்குதல்தாரி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

*Boulevard Charles - de - Gaulle* பகுதியில் நின்றிருந்த பொலிஸார் மீது நபர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

மாலை 6.20 மணி அளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாரிகளை நோக்கி 'அல்லா ஹூ அக்பர்' என கோஷமிட்டுக்கொண்டு அந்த நபர் தாக்குதல் நடத்தியுள்ளாதாக பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த தாக்குதல்தாரி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### ஹெய்ட்டியில் கடத்தப்பட்ட கிறிஸ்தவ மதகுருமாரை

# விடுவிக்க 17 மில்லி. டொலர் கப்பமாக நிபந்தனை

ஹெய்ட்டியில், கடத்தப்பட்ட அமெரிக்க மற்றும் கனேடிய கிறிஸ்தவ மத குருமார்களை விடுவிப்பதற்கு, நபர் ஒருவருக்கு தலா ஒருமில்லியன் டொலர் கப்பம் கோரப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஹெய்ட்டி யின் தலைநகரில் வைத்து, அமெரிக்கர்கள் 16 பேரும் கனடாவைச் சேர்ந்த ஒருவரும் கடத்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதப்பிரச்சார த்தில் ஈடுபடும் பொருட்டு ஹெய்ட்டி வந்துள்ளதாக தெரிய வருகிறது.

கடத்தல்காரர்களால் அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் பற்றிய தகவல்கள், இரண்டு நாட்களாகியும் கிடைக்காததால் ஹெய்ட்டியில் பெரும் பதற்றம் நிலவியது. இந்நிலையில்,வியாழக்கிழமை கிறிஸ்தவ அமைச்சைத் தொடர்புகொண்ட கடத்தல்காரர்கள், 17 மில்லியன் டொலரைக் கப்பமாகக் கோரினர்.

இதுபற்றி உத்தியோகபூர்வத் தகவல்களை வெளியிட்ட அந்நாட்டின் நீதியமைச்சர், கடத்தப்பட்டோரை விடுதலை செய்வதற்கான பேச்சுவார் த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# மியன்மார் இராணுவ அரசை நிராகரித்த ஏசியான் மாநாடு

ஏசியான் நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்க, மியன்மார் வெளிநாட்டு அமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்படவிவில்லை.

இந்த மாநாடு, எதிர்வரும் 26 முதல் 28 வரை புரூணையின்தலைமையில்நடைபெறவுள்ளது.

ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆங்சாங்சுயி, தலைமையிலான அரசாங்கத்தை கடந்த பெப்ரவரியில், கவிழ்த்த இராணுவ ஜூண்டாக்களுக்கு, ஏசியான் அமைப்பு கடந்த ஏப்ரலில் ஐந்து நிபந்தனைகளை விதித்திருந்தது.

இந்த, நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த தவறியதால், மியன்மார் இராணுவ ஜூண்டாக்கள் அரசாங்கத்தை அங்கீகரிக்க ஏசியான் அமைப்பு மறுத்துள்ளமைக்கான அடையாளமாக இது கருதப்படுகிறது. இந்த அமைப்பில் பத்து நாடுகள் உள்ளன.

# கொலின்பவல், கொவிட் தொற்றில் மரணம்

## கறுப்பினத்தவர் சோகத்தில்



கறுப்பினத்தைச் சேர்ந்த அமெரிக்காவின் முதலாவது வெளிநாட்டு அமைச்சர் கொலின்பவல், கொவிட் தொற்றினால் (18) திங்கட்கிழமை 84 வயதில் காலமானார். முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் நிர்வாகத்தில் 2001 இல், இவர் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அமெரிக்காவிலுள்ள கறுப்பினத்தவரின் கௌரவம் இவரின் நியமனத்தின் பின்னர் உயரத் தொடங்கியது. இதையடுத்து, கறுப்பினத்தவர்களான கொண்டலீஸா ரைஸ் வெளிநாட்டு அமைச்சராகவும், பராக் ஒபாமா ஜனாதிபதியாகவும் தெரிவாகினர்.

ஈராக்கில், நச்சுவாயு ஆயுதங்கள் இருப்பதாக அமைச்சரவையில் வழிமொந்து, 2003இல் படையெடுப்பு நடத்திய இவர், ஆப்கானிஸ்தானில் தலிபான்களைத் தோற்கடிக்கவும் படைகளை அனுப்ப ஆலோசனை வழங்கியிருந்தார்.

இது தவிர, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர், படைகளின் துணைத் தளபதியாகவும் கடமையாற்றிய கொலின்பவல், கடந்த 2005 இல், அரசியலிலிருந்து ஒதுங்கியமை குறிப்பிடத்தக்கது.




